


**13.03.2025**

**தலைப்பு செய்திகள்**

1. நாட்டின் கட்டமைப்பு துறை பெரும் வளர்ச்சிகண்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

2. எண்ணெய் வயல்கள் சட்டத்திருத்த மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்டதன் மூலம் எரிசக்தி துறையில் முதலீடுகளுக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளார்.

3. தமிழக அரசின் நடப்பாண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் இன்று வெளியிட்டுள்ளார்.

4. தமிழ்நாட்டில் நீர்நிலைகள் ஆக்கிரமிப்புகளில் இருந்து தொடர்ந்து பாதுகாக்கப்படுவதாக மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

5. All England Open badminton சாம்பியன் பட்ட போட்டியின் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் லக்ஷ்யாசென் இன்று களமிறங்குகிறார்.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖

**அமித்ஷா**

நாட்டின் கட்டமைப்பு பிரிவு மாபெரும் வளர்ச்சிகண்டு வருவதாக மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்

குஜராத் மாநிலம் காந்தி நகரில் 146 கோடி ரூபாய் பெறுமான வளர்ச்சித்திட்ட பணிகளுக்கு இன்று அடிக்கல்நாட்டி பேசிய அமைச்சர், சர்வதேச அளவில் 2-வது பெரிய சாலை இணைப்புகளை கொண்ட நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது என்றார்.

அதேபோல் உலகளவில் 3-வது பெரிய மெட்ரோ இணைப்பை கொண்ட நாடாகவும் நம்தேசம் திகழ்கிறது என்று அமைச்சர் பெருமிதம் தெரிவித்தார்.

❖❖❖❖❖

**எல்.முருகன்**

மக்களவையில் எண்ணெய் வயல்கள் ஒழுங்குமுறை மேம்பாட்டு சட்டத்திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டதன் மூலம் எரிசக்தி துறையில் சுயசார்பிற்கு வழிவகை செய்யப்பட்டிருப்பதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

எரிசக்தி துறையில் இந்தியா தன்னிறைவை எட்டும் வகையிலான இந்நடவடிக்கை, பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான அரசுக்கு கிடைத்த மிகப்பெரும் வெற்றி என்று சமூக வலைதளப்பதிவில் அமைச்சர் கூறியுள்ளார்.

இலகுவான வர்த்தக நடைமுறைக்கு எடுத்துக்காட்டாக திகழும் இந்த செயலாக்கத்தால் எதிர்காலங்களில் எரிசக்தி பிரிவில் ஏராளமான முதலீடுகளுக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

❖❖❖❖❖

**சுகந்த மஜூம்தார்**

**தேசிய கல்விக்கொள்கை இந்திய கல்வி முறையில்** ஒருமாபெரும் புரட்சிக்கு வித்திட்டுள்ளதாக மத்திய கல்வித்துறை இணையமைச்சர் திரு. சுகந்த மஜூம்தார் தெரிவித்துள்ளார்

தாய்மொழியில் கல்வி பயில்வதையே தேசிய கல்விக்கொள்கை வலியுறுத்துவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

8-ம் வகுப்பிற்கு பின்னர் இந்திய மொழி அட்டவணையில் உள்ள 22 மொழிகளில் ஏதாவது ஒன்றை மாணவர்கள் தேர்வு செய்துகொள்ள புதிய கல்விக்கொள்கை வழிகோலுவதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

தமிழக முதலமைச்சர் கூறுவதுபோல பி.ஜே.பியின் கொள்கைகள் எதுவும் இதில் இடம்பெறவில்லை என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

❖❖❖❖❖

**வேவ்ஸ்**

**உலக ஒலி, ஒளி பொழுதுபோக்கு உச்சிமாநாடு** வேவ்ஸ் அமர்வில் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெங்சங்கர், மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு.அஷ்வினி வைஷ்ணவ், இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் உள்ளிட்டோர் இன்று பங்கேற்கின்றனர்.

புதுதில்லியில் நடைபெறும் இந்நிகழ்வில் பல்வேறு நாடுகளின் தூதர்கள் கலந்துகொள்கின்றனர்.

❖❖❖❖❖

**ரிசர்வ் வங்கி**

**வங்கிகளின் நிதிசார்ந்த தரவுகள் பரிவர்த்தனை சூழலை** கண்காணிப்பதற்கான சுய ஒழுங்குமுறை அமைப்பை ஏற்படுத்த தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக இந்திய ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

விருப்பமுடையவர்கள் வங்கியின் Pravaach இணையதளம் வாயிலாக வரும் ஜுன் 15-ம் தேதிக்குள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டே இந்த சுய ஒழுங்குமுறை அமைப்பு மற்றும நிதிதரவு பிரிவு இயங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்பம் சார்ந்த நெறிமுறைகளை ரிசர்வ் வங்கியின் தகவல் தொழில்நுட்ப தனியார் மையம் வகுக்கும் என்றும் ரிசர்வ் வங்கி கூறியுள்ளது

❖❖❖❖❖

**சுனிதா வில்லியம்ஸ்**

**விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸை சர்வதேச விண்வெளி** ஆய்வுமையத்திலிருந்து பூமிக்கு அழைத்து வரும் திட்டம் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

விண்வெளி வீரர்களை பூமிக்கு அழைத்து வருவதற்கான Space - X விண்கலத்தில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப கோளாறு காரணமாக இந்த திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக நாசா அறிவித்துள்ளது.

❖❖❖❖❖

**தமிழக பட்ஜெட்**

**தமிழ்நாடு பட்ஜெட் கூட்டத்தொடர் நாளை தொடங்குகிறது.**

மாநில நிதியமைச்சர் திரு. தங்கம்தென்னரசு, 2025-26ம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையை நாளை பேரவையில் தாக்கல் செய்கிறார்.

இதனைத் தொடர்ந்து அலுவல் ஆய்வுகுழு கூடி கூட்டத்தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது குறித்து இறுதிசெய்யவுள்ளது.

நாளை தாக்கல் செய்யப்படும் பட்ஜெட் அனைத்து தரப்பினருக்குமான நிதிநிலை அறிக்கையாக இருக்கும் என்று முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

தமிழகத்தின் வளர்ச்சியை உறுதிசெய்யும் வகையில் பட்ஜெட் இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பேரவையில் வரும் நிதியாண்டிற்கான வேளாண் நிதிநிலை அறிக்கை நாளைமறுநாள் தாக்கல் செய்யப்படுகிறது.

இதனிடையே மாநில திட்டக்குழு சார்பில் தயாரிக்கப்பட்ட நடப்பு நிதியாண்டிற்கான தமிழக அரசின் பொருளாதார ஆய்வறிக்கையை முதலமைச்சர் இன்று வெளியிட்டுள்ளார்.

❖❖❖❖❖

**முதலமைச்சர் ஃபிடே**

**முன்னதாக ஃபிடே உலக** ஜுனியர் செஸ் சாம்பியன்பட்ட போட்டியில் வெற்றிபெற்ற தமிழகத்தின் சேர்ந்த பிரணவ் வெங்கடேஷிற்கு ஊக்கத்தொகையை முதலமைச்சர் இன்று வழங்கினார்.

❖❖❖❖❖

**துரைமுருகன்**

தமிழகஅரசு நீர்நிலைகளை தொடர்ந்து பாதுகாத்து வருவதாக மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டம் அணைக்கட்டில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், ஆக்கிரமிப்பு தொடர்பான நீதிமன்ற உத்தரவுகளுக்கு மாநில அரசு மதிப்பளிப்பதாக குறிப்பிட்டார்.

பல்வேறு இடங்களில் நீர்நிலை ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினார்

இருப்பினும் சில இடங்களில் ஆக்கிரமிப்பிற்கு எதிராக மக்கள் ஒன்றுகூடி எதிர்ப்பு தெரிவிப்பதால் அவற்றை அகற்ற சிரமம் ஏற்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖

**மா.சுப்ரமணியன்**

சென்னை சைதை தொகுதிக்கு உட்பட்ட 140-வது வார்டு பகுதியில் 1.54 கிலோ மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் இன்று தொடங்கிவைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசியஅவர், 5 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 4 தெருக்களில் நடைபெறவுள்ள இப்பணிகள் மூலம் எந்த மழை வந்தாலும் இப்பகுதியில் வெள்ள பாதிப்புகள் ஏற்படாது என குறிப்பிட்டுள்ளார்.

❖❖❖❖❖

**காந்தி**

தமிழக அரசு மகளிர் முன்னேற்றத்திற்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மாநில கைத்தறி துணிநூல் துறை அமைச்சர் திரு.காந்தி தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தாலிக்கு தங்கம் மற்றும் நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு இன்று வழங்கி பேசியஅவர், இத்திட்டங்களை பயன்படுத்தி பெண்கள் தங்கள் வாழ்க்கையில் முன்னேற்றமடைந்து வருவதாக குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் ஒருகோடியே 22 லட்சம் ரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

❖❖❖❖❖

**சிவசங்கர்**

**கிராமங்களை நகரங்களோடு இணைக்கும் வகையில்** மகளிர் விடியல் பயண பேருந்து இயக்கப்படுவதாக மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்திலிருந்து காடுவெட்டி அணைக்கரை உள்ளிட்ட கிராமங்களுக்கு 12 விடியல் பயண பேருந்து சேவைகளை அமைச்சர் இன்று தொடங்கிவைத்தார். இதன்மூலம் 50-க்கும் மேற்பட்ட கிராம மக்கள் பயன்பெறுவர்.

❖❖❖❖❖

**இருவரி தர்மபுரி**

தர்மபுரி நகராட்சிக்குட்பட்ட மதிக்கோன் பாளையம் பகுதியில் தூய்மை இந்தியா இயக்கம் சார்பில் 62 லட்சம் ரூபாய் மதிப்பிலான நுண் உர செயலாக்க மையத்தை ஆட்சித்தலைவர் திரு. சதீஷ் இன்று ஆய்வு செய்தார்.

❖❖❖❖❖

**தூத்துக்குடி வாய்ஸ்**

**தூத்துக்குடி வ.உ. சிதம்பரனார் துறைமுகம்** நடப்பாண்டு இதுவரை 7 லட்சத்து 47 ஆயிரத்து 363 சரக்கு பெட்டகங்களை கையாண்டு சாதனை படைத்துள்ளதாக ஆணையத்தலைவர்
திரு. சுஷாந்த் குமார் ரோஹித் தெரிவித்துள்ளார்.

இது அதற்கு முந்தைய ஆண்டைவிட 7.52 சதவிகிதம் அதிகம் என்றும் அவர் கூறினார்

இதுகுறித்து எமது தூத்துக்குடி செய்தியாளர் தெரிவிக்கையில்

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖

**பிரதீப்குமார்**

**திருச்சி** மாவட்டம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைப்பறையை ஆட்சித்தலைவர் திரு.பிரதீப்குமார் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் இன்று ஆய்வுசெய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசியஅவர், இக்கிடங்கில் 16 ஆயிரத்து 76 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் இருப்பதாக கூறினார்.

.. **வாய்ஸ்** ..

தொடர்ந்து புதுக்குடி ஊராட்சியில் வேளாண் துறை சார்பில் உழவு இயந்திரத்தை பயனாளிகளுக்கு அவர் வழங்கினார்.

❖❖❖❖❖

**நாமக்கல் வாய்ஸ்**

நாமக்கல் மாவட்ட தேசிய பசுமை படை சார்பில் புதிய பேருந்து நிலையத்தில் தூய்மைப்பணிகள் இன்று மேற்கொள்ளப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖

**பகவதி அம்மன்**

**கேரள மாநிலம் திருவனந்தபுரம் ஆற்றுக்கால்** பகவதி அம்மன் திருக்கோவிலில் பிரசித்திபெற்ற பொங்கல் வழிபாடு வெகுவிமரிசையாக இன்று தொடங்கியது.

இதுகுறித்து எமது கன்னியாகுமரி செய்தியாளர்

❖❖❖❖❖

**பேட்மிட்டன்**

**பர்மிங்ஹாமில்** All England Open badminton **சேம்பியன்பட்ட** போட்டியின் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் லக்ஷயாசென் - இந்தோனேஷியாவின் ஜொனாட்டன் கிறிஸ்டியை இன்று எதிர்கொள்கிறார்.

ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் ரான்கி ரெட்டி, சிராக்ஷெட்டி இணை - சீன இணையை இன்று எதிர்கொள்கிறது.

மகளிர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் காயத்ரி கோபிசந்த், ட்ரீஸாஜாலி இணை - சீன இணையுடன் மோதுகிறது.

❖❖❖❖❖